[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1978 செப்டம்பர் 13

வங்கிகள் சிறுபாசனக் காரியங்களுக்குக் கடன் வழங்க இயலாமல் உள்ளனவோ அங்கேயெல்லாம் வணிக வங்கிகளை அக்காரியங்களுக்குக் கடன் வழங்க அனுமதித்து சமீபத்தில் அரசு ஆணையிட்டுள்ளது. எந்த இடங்களில் சிறுபாசனக் காரியங்களுக்கு வணிக வங்கிகள் கடன் வழங்கலாம் என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் குறிப்பிடுகிறாரோ அங்கு வணிக வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது.

ஆகவே, இந்த இரண்டு முறைகளில் கிழக்கு முகவை மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுடைய நிலைமைகளுக்குப் பரிகாரம் தேட முயன்று வருகிறது என்பதை உறுப்பினர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உறுப்பினர்களுக்கு மட்டும் சொல்லவில்லை, அமைச்சர்கள்கூட சுருக்கமாகச் சொன்னால் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.

(ஆ) கீரனூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வழங்கப்படாமை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ''நன்னிலம் ஒன்றியம், கீரனூர் விவசாயக் கூட்டுறவு சங்கத்தில் கடன் வழங்காததால் விவசாயிகள் விவசாயம் செய்ய இயலாத நிலையினைக் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கிவரும் கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கம் 457 உறுப்பினர்களுக்கு குறுவை மற்றும் சம்பா நெல் பயிரிட 1978 மே திங்கள் முதல் 1978 ஆகஸ்ட் திங்கள் வரை ரூ. 2.78 இலட்சம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது :—

பயிர்	உறுப்பினர்கள் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட கடன் தொகை. ரொக்கப் பகுதி. ரூ.	வழங்கப்பட்ட கடன் தொகை. பொருட் பகுதி. ரூ.	மொத்தம்.
குறுவை	53	41,000	37,000	78,000
சம்பா	404	1,51,000	49,000	2,00,000
மொத்தம் ..	457	1,92,000	86,000	2,78,000

1978 செப்டம்பர் 13] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

முன்னமேயே வழங்கப்பட்டுள்ள 49,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்பகுதி கடன் தவிர மேலும் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள பொருட்பகுதி கடன்கள் சம்பா பயிருக்கு வழங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. நாற்றங்காலுக்கு அடி உரமிடும் பணி துவங்கவில்லையாதலின் உறுப்பினர்கள் கடனில் உரப்பகுதியினை பெற்றுக் கொள்ளவில்லை.

தகுதியுடைய எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பா மற்றும் குறுவை நெல் பயிரிட நடப்பு ஆண்டில் தேவையான கடன் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கத்தில் கடன் வழங்குதலில் எவ்விதமான இடையூறும் இல்லை. விவசாயம் இதனால் பாதிக்கப்படவில்லை.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, நன்னிலம் ஒன்றியம் கீரனூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் கடன் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக சில பேர்கள் கடன் பெற முடியாமல் இருக்கிறது. அவர்களும் விரைவில் கடன் பெற மாண்புமிகு அமைச்சரவர்கள் வகை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அவருடைய ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கிவரும் கீரனூர் கூட்டுறவு விவசாய கடன் சங்கம் 457 உறுப்பினர்களுக்கு குறுவை மற்றும் சம்பா நெல் பயிரிட 1978 மே திங்கள் முதல் 1978 ஆகஸ்ட் திங்கள் வரை 2·78 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.40]

(இ) வேதாரண்யம் பகுதியில் புகையிலை கொள்முதல் செய்யாத நிலை.

திரு. மா. மீனாட்சி சுந்தரம்:
திரு. மு. அம்பிகாபதி: } தலைவர் அவர்களே,

" தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் வட்டாரத்தில் உற்பத்தியாகும் புகையிலையை யாரும் கொள்முதல் செய்யாததால் ஏறத்தாழ 6,000 விவசாயிகளும் 2,000-க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களும் அல்லற்படுவதோடு கூட்டுறவுக் கடன்களை அடைக்க முடியாத நிலையிலிருப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.